சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–31.07.2020

<u>சாதாரணக்கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு, சார்வரி வருடம் ஆடி மாதம் 16–ஆம் நாள் ( ஜீலை திங்கள் 31–ஆம் நாள்:– 31.07.2020) வெள்ளிக் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் கட்டப்பட்ட நகராட்சி அலுவலகத் தெருவில் அமைந்துள்ள IDSMT கடை எண்.5–ஐ திரு.ச.மூசா நஸீம் பெயரில் உள்ளது. ச.மூசா நஸீம் குடும்ப சூழ்நிலை காரணமாக தொடர்ந்து கடையினை நடத்த முடியாத காரணத்தால் அவரது பங்குத்தாரர் திரு.மு.முகமது அபுபக்கர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **62, நாள்.31.07.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு 01.07.2017 முதல் 31.12.2019 வரை உள்ள காலத்தில் வாங்கப்பட்ட தினசரி நாளிதழ்கள் 03.07.2020ம் அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி கொடுத்த விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | திரு.க.மாரிமுத்து த/பெ.கல்யாண்டி பிள்ளை,<br>வ.எண்.14, கதவு எண்.76,<br>முனீஸ்வரன் கோவில் 1வது தெரு, சின்னமனூர் | ரூ.11.00<br>கிலோ 1–ஒன்றுக்கு |
| 2. | திரு.எஸ்.ராமகிருஷ்ணன், த/பெ.சுப்பையா பிள்ளை<br>வார்டு எண்.15, வஉசி 3வது தெரு, சின்னமனூர் | ரூ.8.50<br>கிலோ 1–ஒன்றுக்கு |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் கண்ட திரு.க.மாரிமுத்து என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கிலோ 1–ஒன்றுக்கு ரூ.11.00 என்பதை மன்றம் ஒப்புதல் செய்யலாம்.**

**தீர்மான எண், நாள்** **63, நாள்.31.07.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழக அரசு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவின்படி பொது மக்களிடம் கொரோனா தொற்று தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கொரோனா தொற்று சம்மந்தமாக விழிப்புணர்வு பதாகை (Flex Board) பெரிய அளவில் பொது மக்கள் அதிகம் கூடும் 5 இடங்களில் வைப்பதற்கு ஆங்கில் மற்றும் கூலி உட்பட ஆகும் உத்தேச செலவினம் ரூ.26500/– வழங்க மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **64, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகம் கூடும் 5 இடங்களில் கொரோனா தொற்று பரவுவதை தடுப்பது தொடர்பான விளம்பர பதாகைகள் (Flex Board) வைப்பதற்கு 09.07.2020 ஆம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்ட விவரப்படி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **1.Print Tech Digital Flex Printing, Chinnamanur** | | |
| 1.Flex 1 No | - | Rs.1700/- |
| 2.Fitting Charges and Frame | - | Rs.3600/- |
| Total | | Rs.5300/- |
| **2.Joy Petra Stickers and Board, Chinnamanur** | | |
| 1.Flex 1 No | - | Rs.1900/- |
| 2.Fitting Charges and Frame | - | Rs.3000/- |
| Total | | Rs.4900/- |
| **3.Joy Flex , Chinnamanur** | | |
| 1.Flex 1 No | - | Rs.1700/- |
| 2.Fitting Charges and Frame | - | Rs.3800/- |
| Total | | Rs.5500/- |

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த Print Tech Digital Flex Printing, Chinnamanur நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்கலாம்.**
2. **தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு மற்றும் தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **65, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு பணியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைக்கு தேவையான ஒரு முறை பயன்படுத்தும் முக கவசம் (One Use Mask) மற்றும் முழு உடற் கவசம் (PPE Kit) போன்றவற்றை சுழற்சி முறையில் வழங்க வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவில் அறிவுறுத்தியதை தொடர்ந்து தற்போது பணியாளர்களுக்கு வழங்க 20000 எண்ணம் முக கவசம் மற்றும் 100 எண்ணம் முழு உடற் கவசம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதார பணியின் மற்றும் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **66, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தடுப்பு பணியில் பணிபுரியும் பணியாளர்களின் பாதுகாப்பு நடவடிக்கைக்கு தேவையான N95 முக கவசம் தேவையான அளவு வாங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தேனி ஆகியோரின் அறிவுறுத்தலின்படி மேற்படி முக கவசம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **67, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான முக கவசம் மற்றும் முழு உடற்கவசம் வாங்கும் பணிக்கு **15.07.2020–**ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. MSKSVM Traders and Agencies, Theni
   i).Mask (3 Layers) – 1 No – Rs.14/-
   ii). PPE Kit 1st Quality – 1 No – Rs.433/-

2. Karthik Agencies, Madurai
   i). Mask – 1 No – Rs.17/-
   ii). PPE Kit – 1 No – Rs.480/-

3. MSMVM Agencies, Sivagangai
   i). Mask -1 No – Rs.21/-
   ii). PPE Kit – 1 No –Rs.530/-

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த M/s MSKSVM Traders and Agencies, Theni என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை விலை விகிதம் குறைவாக இருப்பதால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **68, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

கொரோனா தடுப்பு பணியில் பணிபுரியும் பணியாளர்களின் பாதுகாப்பு நடவடிக்கைக்கு தேவையான N95 முக கவசம் விநியோகிக்கும் பணிக்கு 16.07.2020 ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. MSKSVM Traders and Agencies, Theni -1 No – Rs.130/-

2. Karthik Agencies, Authorised Distributors Madurai –1 No – Rs.160/-

3. MSMVM Agencies, Sivagangai – 1 No – Rs.210/-

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த M/s MSKSVM Traders and Agencies, Theni என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **69, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று அதிகம் உள்ள பகுதிகளை கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்ட நிலையில் மேற்கண்ட பகுதிகளில் மீண்டும் தொற்று ஏற்படாமல் இருக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் (Containment Zone) வாகனங்கள் நிறுத்த தடை செய்யப்பட்டுள்ளது என அறிவிப்பு விளம்பர பதாகைகள் (Flex) வைக்க 1 எண்ணத்திற்கு ரூ.160/– வீதம் 100 எண்ணம் பதாகைகளுக்கு அச்சிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.16000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.2139/2020/எச்1)**
**தீர்மான எண், நாள்** **70, நாள்.31.07.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு தொற்று அதிகம் உள்ள பகுதிகள் என கண்டறியப்பட்ட பகுதிகளை கட்டுப்படுத்தப்பட்ட பகுதி (Containment Zone) என அறிவிப்பு விளம்பர பதாகை வைக்க மாவடட ஆட்சித் தலைவர், தேனி அவர்களின் அறிவுறுத்தலை தொடர்ந்து மேற்படி விளம்பர பதாகைகள் 100 எண்ணம் அச்சிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.16000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.2138/2020/எச்1)**
**தீர்மான எண், நாள்** **71, நாள்.31.07.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களின் அறிவுறுத்தலின்படி பொது இடங்களில் வாகனங்கள் நிறுத்தக் கூடாது என அறிவிப்பு விளம்பர பதாகை 50 எண்ணம் அச்சிடும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.2140/2020/எச்1)**
**தீர்மான எண், நாள்** **72, நாள்.31.07.2020**
**தீர்மானம்**

*******

## பொருள் எண்.12

இந்நகராட்சியின் பொதுப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் வண்டி எண்.TN60S6634–இல் உள்ள நான்கு டயர்கள் நன்கு தேய்ந்து விட்ட காரணத்தினால், புதிய டயர்கள் (MRF) வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவின தொகை ரூபாய்.28000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **தனி அலுவலா் மற்றும் ஆணையாளா் அவா்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.**
3. **மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் முலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.7057/2014/இ2)**

**தீா்மான எண், நாள்** **73, நாள்.31.07.2020**

**தீா்மானம்**

*******

## பொருள் எண்.13

இந்நகராட்சிக்குச் சொந்தமான குடிநீா் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சிறு மின்விசைப் பம்புகளில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு தேவையான உதிரி பாகங்கள் வாங்கி இருப்பில் வைத்துக் கொள்வதற்கு நகா்மன்றத் தீா்மான எண்.52, நாள்.30.06.2020 அனுமதி பெறப்பட்டதை தொடா்ந்து, மேலும் பணி செய்வதற்கு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி 09.07.2020–ஆம் நாள் அறிவிப்பு செய்யப்பட்டதில், வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பாா்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | மதிப்பீடு % –இல் |
|---|---|---|
| 1. | திரு.ஆா்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | 0.08% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.கா.வனராஜ், சின்னமனூா் | 0.18% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆா்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி அவா்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் அதனை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4467/2019/இ2)**

**தீா்மான எண், நாள்** **74, நாள்.31.07.2020**

**தீா்மானம்**

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஜெராக்ஸ் மிஷினின் டோனர் காலியாகிவிட்ட படியால், புதிய டோனர் வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.20000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:—

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.**
3. **மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1456/2020/இ2)**

**தீர்மான எண், நாள்** **75, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஜெராக்ஸ் மிஷினிக்கு புதிய டோனர் வாங்கி பொருத்தும் பணிக்கு முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து 27.07.2020—ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | SHAZ Copier Technique நிறுவனம், மதுரை | ரூ.6608/— |
| 2. | Velan Technology Madurai | ரூ.6962/— |

அலுவலகக் குறிப்பு:—

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் SHAZ Copier Technique நிறுவனம் மதுரை, அவர்களின் விலைப்புள்ளியின் விலை விகிதம் குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளிதாரரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1456/2020/இ2)**

**தீர்மான எண், நாள்** **76, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.16**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desitling Auto வாகன எண்.TN60Q4981க்கு FC முடிவடைவதால், புதிய FC எடுப்பதற்கு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள உத்தேச தொகை ரூபாய்.16000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:—

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.**
3. **மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3245/2017/இ2)**

**தீர்மான எண், நாள்** **77, நாள்.31.07.2020**

தீர்மானம்

*******

**பொருள் எண்.17**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desitling Auto வாகன எண்.TN60Q4963–க்கு FC முடிவடைவதால், புதிய FC எடுப்பதற்கு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள உத்தேச தொகை ரூபாய்.15450/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.**
3. **மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3462/2017/இ2)**

**தீர்மான எண், நாள்** **78, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.18**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான புதை குழி வடிகால் திட்டம் (பாதாள சாக்கடை திட்டம்) நடைமுறைப்படுத்தப்பட்டு போதிய பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது ஒப்பந்த காலம் ஆகஸ்ட் 2020 உடன் முடிவடைய உள்ளதால் செப்டம்பர் 2020 முதல் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் பாதாள சாக்கடைத் திட்ட நிதியில் மேற்கொள்ளலாம்.**

**தீர்மான எண், நாள்** **79, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.19**

சின்னமனூர் நகரரட்சியிலிருந்து கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2019–2020–ஆம் நிதியாண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய வருடாந்திர நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.20000/– (ரூபாய் இருபது ஆயிரம் மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2633/2018/சி1)**

**தீர்மான எண், நாள்** **80, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.20**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாகத்தில் இருந்து பெறப்படும் வாடகை மீதான சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஒவ்வொரு மாதமும் வசூல் செய்யப்படும் தொகையில் இருந்து 18% அரசு கணக்கில் செலுத்துவதற்கு கணினியில் பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளதால் 2020–2021–ஆம் ஆண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.15000/–க்கு (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4949/2017/அ2)**

**தீர்மான எண், நாள்** **81, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.21**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகன எண்கள்.TN60AW6788 மற்றும் TN60AV1716–இல் உள்ள 12 டயர்கள் தேய்ந்து விட்டதால் 12 எண்ணம் புதிய டயர்கள் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.36000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0661/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **82, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.22**

சின்னமனூர் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகன எண்கள்.TN60AW6788, TNM60AW6707 மற்றும் TN60AV1716 ஆகிய வாகனங்களுக்குத் தேவையான 12 புதிய டயர்கள் வாங்குவதற்கு 22.07.2020–ஆம் நாள் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. லெட்சுமி, சின்னமனூர் – ரூ.33900/–
2. பிரகாஷ் டயர்ஸ், ஆண்டிப்பட்டி – ரூ.35100/–

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் சின்னமனூர், லெட்சுமி டயர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**
2. **பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதையும் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.0661/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **83, நாள்.31.07.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.23**

சின்னமனூர் பேரூராட்சி 01.04.1977 முதல் 3–ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 1984 முதுல் 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தொடர்ந்து 2–ஆம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நகராட்சி 25.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவினை கொண்டுள்ளது. 2011ம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 42305 ஆகும். நகர் வாழ் பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் நகரிலிருந்து 4.89 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள வேம்படி களத்தில் கட்டப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்தில், பெரியாற்றின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து (Infiltration wells) நீர் சேகரம் செய்யும் கிணற்றுக்கு (Collection wells) கொண்டு வரப்பட்டு, 4.89 கி.மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குடிநீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கு நீர் சுத்திகரிக்கப்பட்டு, அங்கிருந்து சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தரைமட்ட நீர் தேக்கத் தொட்டிகள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கிருந்து நகர்வாழ் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிக்கு தலைமை நீரேற்று நிலையத்தில் 40 குதிரை வேக மின் மோட்டார்கள் 3 எண்ணம், 30 குதிரை வேக மின் மோட்டார் 1 எண்ணம், நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 20 குதிரை வேக மின் மோட்டார் 2 எண்ணம், 15 குதிரை வேக மின் மோட்டார் 2 எண்ணம் மற்றும் 5 குதிரை வேக மின் மோட்டார் 1 எண்ணம் அமைக்கப்பட்டுள்ளதுடன், தலைமை நீரேற்று நிலையத்தில் நீர் உறிஞ்சு கிணறுகளில் 5 குதிரை வேக திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார்கள் 12 எண்ணம் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய 35 எண்ணம் பொதுக் குழாய்கள் (Public Fountation) அமைக்கப்பட்டுள்ளன.

நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவை தவிர்த்து பிற தேவைகளை பூர்த்தி செய்ய நகரில் 76 எண்ணம் மின் பவர் பம்ப் அமைக்கப்பட்டுள்ளதுடன், 121 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் (Hand Pump) அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 4.700 கிலோ மீட்டர் நீளத்திற்கு பிரதானக் குழாய்களும், 34.900 கி.மீட்டர் நீளத்திற்கு பகிர்மானக் குழாய்களும் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகப் பணி (Pumping Main and Distribution Main) அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிக்கு நாளது தேதியில் 2 மின் பணியாளர்கள் (Electrician) 1 குழாய் பொருத்துநர் மற்றும் 1 மதகு திறப்பாளர் (Turn Cock) பணியிடங்கள் மட்டுமே நடைமுறையில் உள்ளன. சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தண்ணீர் தொட்டிக்கும், குருக்கள் பள்ளித் தெருவில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும், வேம்படி களத்தில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்திற்கும் (Water Tank, FIlter Bed and Water Supply Head works) பகல் மற்றும் இரவு காவல் பணிக்கு போதுமான பணியாளர்கள் இல்லை. மேலும் குடிநீர் விநியோக பொதுக் குழாய்கள், ஆழ்துளை கிணறுகள், பிரதானக் குழாய்கள், பகிர்மானக் குழாய்கள், மினி பவர் பம்ப்கள் மற்றும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்து சீரான குடிநீர் விநியோகம் நடைபெற போதுமான பணியாளர்கள் நகராட்சியில் நடைமுறையில் இல்லாததாலும், குடிநீர் விநியோக இடங்களில் பராமரிப்புப் பணிக்கு பணியாளர்கள் தேவைப்படுவதாலும், மின் மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை நிவர்த்தி செய்ய பணியாளர்கள் தேவைப்படுவதாலும், போதிய பணியாளர்கள் பணியிடம் நடைமுறையில் இல்லாததால், மேற்படி பணிகளை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி மேற்படி ஒப்பந்தப்பணிக்கு வழங்கப்பட்ட தொகை ஆகஸ்ட் 2020 உடன் முடிவடைவதால் செப்டம்பர் 2020 முதல் மேற்படி பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.9.90 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1450/2012/இ2)

தீர்மான எண், நாள் 84, நாள்.31.07.2020

தீர்மானம்

*******

## பொருள் எண்.24

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அலுவலக ந.க.எண்.2571/2017/ஜே1, நாள்.23.04.2018–ஆம தேதிய கடிதத்தில் 50 வீட்டிற்கு ஒரு டெங்கு தடுப்பு பணியாளர்கள் (DBC) நியமித்துக் கொள்ள உத்திரவிட்டதைத் தொடர்ந்து உரிய மன்ற அனுமதி பெற்று டெங்கு தடுப்புப் பணிகள் பார்த்து வரப்பட்டது. தற்போது கொரோனா தொற்று அதிகம் பரவி வரும் சூழ்நிலையில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் காணொளி காட்சி நாள்.25.06.2020–ஆம் தேதிய கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ந.க.எண்.1084/2020/அ3, நாள்.25.06.2020–ஆம் தேதிய கடிதத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு மேற்கொள்ளப்பட்டது போல் கொரோனா தொற்று தடுப்பு பணிக்கு டெங்கு தடுப்பு பணியாளர்களை பயன்படுத்திக் கொள்ள அறிவுறுத்தியதை தொடர்ந்தும் தினசரி ஒரு நபருக்கு 50 வீடுகள் என பிரித்து மேற்படி வீடுகளில் சளி, காய்ச்சல், இருமல் மற்றும் இதர தொந்தரவுகள் உள்ளதா என பரிசோதனை கருவிகள் மூலம் பரிசோதனை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி மேற்படி 37 DBC பணியாளர்களை கொண்டு கொரோனா பணி பார்த்து வரப்படுகிறது. மேற்படி பணியாளர்களுக்கு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி திரு.ஆர்.பரமானந்தன் என்பவருக்கு ஓராண்டிற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்த நிலையில் தற்போதைய சூழ்நிலையில் கொரோனா தொற்று காரணமாக மத்திய மாநில அரசுகள் முழு ஊரடங்கு அறிவித்திருந்த நிலையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள முடியாத சூழ்நிலையில் மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்வதால் மேற்கண்ட பணியினை 37 DBC பணியாளர்கள் மூலம் பணிகள் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ஏற்கனவே மேற்கொண்டு வரும் திரு.ஆர்.பரமானந்தன் ஒப்பந்தக்காரர் மூலமாக பழைய நிபந்தனைகளுக்குட்பட்டு பழைய விலை விகிதத்தில் மேற்கண்ட பணியினை மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும் (17.07.2020 முதல் 16.10.2020) அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்த பணியினை மூன்று மாதம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0680/2018/எச்1)

தீர்மான எண், நாள் 85, நாள்.31.07.2020

தீர்மானம்

*******